ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 3 | ஜூன் 1998 | கானம் : 11

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 3 ஜுன் 1998 கானம் : 11

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 31 | 5 |
| 3. | ப்ரமர கீதம் | 7 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 12 | 9 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் - தொடர்ச்சி | 11 |
| 6. | வேத கதைகள் - 13 | 12 |
| 7. | எந்தரோ மஹானுபாவலு - 1 | 15 |
| 8. | ஷ்ரவண பக்தி | 18 |
| 9. | கேட்பதில் மூன்று விதம் | 19 |
| 10. | பாவ லோகத்தில் ஒரு ஸஞ்சாரம் | 21 |
| 11. | பாலகர்களுக்கு ஒரு கதை - 8 | 26 |
| 12. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 34 | 28 |
| 13. | செய்திகள் | 32 |
| 14. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



ஸ்ரீஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : அஸாவேரி தாளம் : ஆதி

பல்லவி

*பாடாத நாளெல்லாம் பாழே - முரளீதரனை (பாடாத)*

அனுபல்லவி

*வாழவும் வழி அறியீர், தொழுதிடவும் மாட்டீர்,*
*காலம் நழுவின பின், அழுதென்ன பயனோ? (பாடாத)*

சரணம்

*ஆழ்நீரிலிருந்தே வேழமும் அழைத்ததன்றோ - ஒரு*
*நாழிகையில் அதன் தாபமும் தீர்ந்ததன்றோ*
*ஊழ்வினை அறுத்திடும் ஊழி முதல்வனை*
*பழுது போகுமுன் தொழுதேத்துவீரே (பாடாத)*

அறிவிப்பு : 1. பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் "அருணாசல அக்ஷரமணமாலை" ஸ்ரீ குருஜியின் உபன்யாஸ கேஸட்டுகள் - மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன.

2. மதுரமுரளி இரண்டாண்டு இதழ்கள், (July '95 - June '97) இரண்டு பாகங்களில் Bind செய்யப்பட்டு வெளி வந்துள்ளன.

3. மதுரமுரளி மூன்றாம் ஆண்டு இதழ்கள் 'July '97 - June '98' தனி பாகமாக வெளி வர உள்ளது.

இவை சென்னை ப்ரேமிக பவனத்தில் கிடைக்கும்.



ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள்

ஒரு நாள், நம் ஸ்வாமிகள் பேசிக் கொண்டிருந்தபொழுது கூறிய ஒரு விஷயத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று தோன்றியதால் அதைப்பற்றி எழுதுகின்றேன். முன்பெல்லாம், நம் ஸ்வாமிகள் ஸ்ரீமத் பாகவத உபன்யாஸத்தை சிலருடைய க்ருஹங்களில் சொல்லி வந்துள்ளார். ஆனால், இப்பொழுதெல்லாம் பக்த விஜயம் மட்டுமே உபன்யாஸம் செய்து வருகின்றார்கள். ஒரு ஸமயம் குரோம்பேட்டையில் ஒருவரின் க்ருஹத்தில் நம் ஸ்வாமிகள் ஸ்ரீமத் பாகவதம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒவ்வொரு நாளும், மறுநாள் உபன்யாஸத்தில் என்ன சொல்ல வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்வது பழக்கமாம். அந்த உபன்யாஸத்தில் வராஹ அவதார கட்டம் சொல்லும் நாளில் அதைப் பற்றிச் சொல்ல வேண்டாம்; அந்த நேரத்தில் மற்ற சரித்ரங்களை விஸ்தாரமாக சொல்லலாமே என்று ஸ்வாமிகள் தீர்மானித்து இருந்தாராம்.

அன்று இரவு, நம் ஸ்வாமிகளுக்கு ஒரு திவ்ய ஸ்வப்னம் ஏற்பட்டது. அதில் ஒரு மிகப் பெரிய கோவிலை பார்த்தார். அந்த கோவிலின் நடுவே ஒரு அழகான பூவராஹமூர்த்தி இருந்தார். அவருடைய கழுத்தில் சிறிய மல்லிகை ஸரம் ஒன்று இருந்தது. அந்த மூர்த்தி நம் ஸ்வாமிகளைப் பார்த்து, ''நாளை ஏன் என்னைப் பற்றி உபன்யாஸத்தில் சொல்லப் போவதில்லை? அவச்யம் சொல்வாய்'' என்று சொன்னாராம். அப்படியே, நம் ஸ்வாமிகள் மறுநாள் வராஹ அவதாரத்தைப் பற்றி விஸ்தாரமாக உபன்யாஸம் செய்தாராம்.

இந்த ஸம்பவம், அநேகமாக மறந்து விட்ட நிலையில், ஒரு நாள் கும்பகோணம் செல்லும் வழியில் ஸ்ரீமுஷ்ணம் சென்றுவிட்டு செல்லலாமே என்று தோன்றி அங்குள்ள பெருமாளை ஸேவிக்கச் சென்றாராம். ஸ்வாமிகளுக்கு ஒரே ஆச்சர்யம்! அன்று திவ்ய ஸ்வப்னத்தில் பார்த்த அதே மாதிரியே அந்த கோவிலும் அதிலுள்ள மூர்த்தியும் இருந்தாராம். அதை விட ஆச்சர்யம்! அன்றும் ஒரே ஒரு மல்லிகை ஸரம் மட்டுமே பெருமாளுக்கு சாற்றப்பட்டு இருந்ததாம். நம் ஸ்வாமிகளும், ''நீ தான் அன்று ஸ்வப்னத்தில் வந்தாயோ!'' என்று மனமுருகி ப்ரார்த்திக்க, அந்த ஸரமும் அப்படியே கீழே விழுந்துவிட்டதாம்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்



ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் பெருமாள் புறப்பாட்டில் நம் ஸ்வாமிகள் பக்தர்களுடன்

# ப்ரமர கீதம்

## கோப்யுவாச

மதுப கிதவபந்தோ மா ஸ்ப்ருமாங்க்ரிம் ஸபத்ந்யா:
குசவிலுலித மாலாகுங்குமமஸ்ருபிர் ந: ।
வஹது மதுபதிஸ்தன் மாநிநீநாம் ப்ரஸாதம்
யதுஸதஸி விடம்ப்யம் யஸ்ய தூதஸ்த்வமீத்ருக் ॥ 1

ஸக்ருததரஸுதாம் ஸ்வாம் மோஹிநீம் பாயயித்வா
ஸுமனஸ இவ ஸத்யஸ்தத்யஜே(அ)ஸ்மான் பவாத்ருக் ।
பரிசரதி கதம் தத்பாதபத்மம் து பத்மா
ஹ்யபி பத ஹ்ருதசேதா உத்தமஸ்லோக ஜல்பை: ॥ 2

கிமிஹ பஹு ஷடங்க்ரே காயஸி த்வம் யதூநாம்
அதிபதிமக்ருஹாணாமக்ரதோ ந: புராணம் ।
விஜயஸக ஸகீநாம் கீயதாம் தத் ப்ரஸங்க:
க்ஷபிதகுசருஜஸ்தே கல்பயந்தீஷ்டமிஷ்டா: ॥ 3

திவி புவி ச ரஸாயாம் கா: ஸ்த்ரியஸ்தத்துராபா:
கபடருசிரஹாஸ ப்ரூவிஜ்ரும்பஸ்ய யா: ஸ்யு: ।
சரணரஜ உபாஸ்தே யஸ்ய பூதிர் வயம் கா
அபி ச க்ருபணபக்ஷே ஹ்யுத்தமஸ்லோகஸப்த: ॥ 4

விஸ்ருஜ ஸிரஸி பாதம் வேத்ம்யஹம் சாடுகாரை:
அநுநயவிதுஷஸ்தே (அ)ப்யேத்ய தௌத்யைர் முகுந்தாத் ।
ஸ்வக்ருத இஹ விஸ்ருஷ்டாபத்ய பத்யந்யலோகா
வ்யஸ்ருஜதக்ருதசேதா: கிம் நு ஸந்தேயமஸ்மின் ॥ 5

ம்ருகயுரிவ கபீந்த்ரம் விவ்யதே லுப்ததர்மா
ஸ்த்ரியமக்ருத விரூபாம் ஸ்த்ரீஜித: காமயாநாம் ।
பலிமபி பலிமத்வா வேஷ்டயத் த்வாங்க்ஷவத் ய:
ததலமஸிதஸக்யைர் துஸ்த்யஜஸ் தத்கதார்த: ॥ 6

யதநுசரித லீலாகர்ணபீயுஷ விப்ருட்
ஸக்ருததநவிதூத த்வந்த்வதர்மா விநஷ்டா: ।
ஸபதி க்ருஹ குடும்பம் தீன முத்ஸ்ருஜ்ய தீநா
பஹவ இஹ விஹங்கா பிக்ஷுசர்யாம் சரந்தி ॥ 7

வயம்ருதமிவ ஜிம்ஹவ்யாஹ்ருதம் ஶ்ரத்ததாநா:
குலிகருதமிவாஜ்ஞா: க்ருஷ்ணவத்வோ ஹரிண்ய:।
தத்ருஶஶ்ரஸக்ருதேதத் தந்நகஸ்பர்ஶ தீவ்ர-
ஸ்மரருஜ உபமந்த்ரின் பண்யதாமந்யவார்தா॥ 8

ப்ரியஸக புனராகா: ப்ரேயஸா ப்ரேஷித: கிம்
வரய கிமநுருந்தே மாநநீயோஸிமே(அ)ங்க ।
நயஸி கதமிஹாஸ்மான் துஸ்த்யஜ அத்வந்த்வபார்ஶ்வம்
ஸதத முரஸி ஸௌம்ய ஶ்ரீர்வதூ: ஸாக மாஸ்தே ॥ 9

அபி பத மதுபுர்யாமார்யபுத்ரோSதுநா (ஆ)ஸ்தே
ஸ்மரதி ஸ பித்ருகேஹான் ஸௌம்ய பந்தூம்ஶ்ச கோபான் ।
க்வசிதபி ஸ கதா ந: கிங்கரீணாம் க்ருணீதே
புஜமகுருஸுகந்தம் மூர்த்ந்யதாஸ்யத் கதாநு ॥ 10

---

## அறிவிப்பு

ஸ்ரீ ஹரி :

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

சென்னை - 600 083

## மதுரமுரளி வருட சந்தா

''மதுரமுரளி'' க்கான வருட சந்தா ஜூன் '98 இதழுடன் முடிவடைகிறது.

***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDயாக ரூ. 60/-ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

மதுரமுரளி,
திரு. V. சங்கரன்,
5 / 3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே. நகர், சென்னை - 600 078.
Phone No : 484 0527

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 12

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
**A. சுந்தரேச ஸர்மா வாஜபேயயாஜி**

## சித்திரை

த்வஷ்டா என்கின்ற தேவதையைக் கொண்ட நக்ஷத்ரம் சித்திரையாகும். ஒவ்வொரு ஜீவராசிக்கும் உருவ லக்ஷணத்தைக் கொடுக்கும் தேவதை இது. சித்ரா நக்ஷத்ரத்தில் ஜனித்தவர்கள் அநேகமாக யாவரையும் கவரக்கூடிய உருவ அமைப்பை அடைந்திருப்பார்கள். சித்ரா நக்ஷத்ரம் ஆகாயத்தில் இரண்டு நக்ஷத்ரங்களாக தெற்கிலும் வடக்கிலுமாக, இரண்டு கண்கள் போல் ப்ரகாசிக்கின்றதாக சொல்லியுள்ளார்கள்.

ஆனி மாதம் 21-ந் தேதி முதல் ஆடி மாதம் 3-ந் தேதி முடிய மாலை 6 மணி சுமாருக்கு தலைக்கு மேல், ஆகாயத்தில் இந்த நக்ஷத்திரம் காணப்படும் என்று வானஶாஸ்த்ரக்ஞர்கள் கூறியுள்ளார்கள். இந்த நக்ஷத்ர தேவதை, ரதத்தில் ஏறியவராக, க்ரீடதாரியாக, ஶங்க சக்ர தாரியாக ப்ரகாஶிக்கிறார். பொதுவாக, சித்ரா நக்ஷத்ரத்தில் பிறந்த பிள்ளைகளைப்பற்றி ஒரு பழமொழி உண்டு. ''சித்திரையப்பன் தெருவிலே'' என்பதாகும் அது. இது ஓரளவு உண்மையாகவே இருக்கிறது. ஏதாவது ஒரு மாற்றத்தை இவன் நிச்சயம் ஏற்படுத்துவான். சிறிது ப்ரமம் ஏற்படினும், ஶாந்தி செய்வதன் மூலம் அனுகூல முடிவையே கொடுப்பான்.

சித்ரா நக்ஷத்ரத்தில் ஜனித்தவர்கள், பலவிதமான ஆடை அணிகலன்களில் விருப்பம் கொண்டு அணிபவர்களாக இருப்பார்கள். கண்ணழகு மிக்கவர்களாக இருப்பார்கள். ஸங்கீதத்திலும் மிகவும் நாட்டம் கொண்டிருப்பார்கள். துலா ராசிக்காரராக இருந்தால் மிகவும் பக்தி மிக்கவர்களாகவும், யாவரையும் மதிப்பவர்களாகவும் இருப்பார்கள். பெண்களுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள். சித்ரா நக்ஷத்ரக்காரர்கள் மெலிந்த, உயர்ந்த உருவம் கொண்டவர்கள். பலம்

குறைந்தவர்கள். ஸாதாரணமாக இருக்கும் ஒரு பொருளைக் கூட மதிப்பு மிக்கதாக ஆக்குவதில் திறமை கொண்டவர்கள் இவர்கள். சித்திரையில் பிறந்த பெண்கள் அழகுடையவர்களாக இருப்பார்கள்.

பொதுவாக சித்ரா நக்ஷத்ரக்காரர்கள், சில ஸமயங்களில் யாவருக்கும் உதவி செய்து விட்டு கடைசியில் த்வேஷத்திற்கு ஆளாகும்படியான கார்யத்தையும் செய்துவிடுவதுண்டு. அந்த ஸமயங்களில், இவர்கள் நிதானத்தை கடைப்பிடித்தால் மிக உயர்ந்து விளங்குவார்கள். இவர்கள், ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபட்டால் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்யலாம்.

சித்ரா நக்ஷத்ர யாகத்தால் ஸந்ததி வ்ருத்தியாகும். புத்ர, பௌத்ர, தௌஹித்ர லாபம் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது. தன் பெண்ணுக்கு பிள்ளை பிறக்க வழியை உலகில் வேறெங்கும் காண முடியாது. ப்ரதி சித்ரா நக்ஷத்ரத்தன்று அந்த நக்ஷத்ர தேவதையான த்வஷ்டாவை ஆராதிப்பதால் மட்டுமே தௌஹித்ரனை அடைய முடியும் என்று தெரிகிறது.

சித்ரா நக்ஷத்ரத்தில் அக்ன்யாதானம் செய்வதைக் குறித்து வேதத்தில் ஒரு கதை உள்ளது. காலகஞ்ஜர்கள் என்ற அஸுரர்கள் ஸ்வர்க்கத்தை அடைய அக்னிஶயனம் செய்தார்கள். மந்த்ரங்களைச் சொல்லி கற்களை அடுக்கினார்கள். அஸுரர்கள் மேன்மையை அடைவதால் உலகிற்கு நன்மை ஏதும் செய்ய மாட்டார்கள் என்பதால் அதை பலமிழந்து போகச் செய்ய இந்திரன், சித்ரை என்று ஒரு இஷ்டகையை அஸுரர் வேடம் பூண்டு நடுவில் வைத்துவிட்டார். ஶயனம் முடியும் தறுவாயில், இந்திரன் சித்ரை என்ற கல்லை எடுத்துவிட, அதில் ஓட்டை விழுந்துவிட்டது.

இதனால் அஸுரர்கள் கீழே விழுந்து ஒட்டடை பூச்சிகளாகி தானாகவே ஒரு வலையைப் பின்னிக்கொண்டு அதில் நின்றார்கள். அவர்களிலும் இரு அஸுரர்கள் மிக்க பக்தியுடன் கடமையைச் செய்ததனால் தேவலோகத்தில் நாய்களானார்கள் என்று ஒரு உபாக்யானம் உள்ளது. இதில் சித்ரா நக்ஷத்ரத்தின் ஆதானத்தின் பெருமை விளக்கப்படுகிறது. சத்ருக்கள் மிக்கவன் சித்ரையில் அக்ன்யாதானம் செய்து கொண்டு சத்ருக்களை பலமிழக்கச் செய்து, தான் பலம் பெற்று உலக நன்மையைச் செய்ய வேண்டியது அவஶ்யமாகும். ■

Photos by : Sri R. Kalyanakrishnan

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் - தொடர்ச்சி

*கேள்வி : எப்பொழுதும் ராம நாம ஜபம் செய்து கொண்டிருக்கின்றேன். நான் வேறு என்ன செய்ய வேண்டும்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : 'ராம' நாம ஜபம் செய்வதே போதுமானது. மேலும் மேலும் பல மந்த்ரங்களை உபதேசம் வாங்கிக் கொண்டு ஜபம் செய்வதால் பலனில்லை. ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், இதற்கு அழகான ஒரு உதாரணம் கூறுவார் :

ஒருவன், ஒரு மாட்டை, புல்வெளியில் கட்டிவிட்டுச் சென்றான். அவன் மீண்டும் வந்து பார்க்கையில் அந்த மாடானது, அது கட்டப்பட்டுள்ள எல்லைக்குள் உள்ள எல்லா புற்களையும் மேய்ந்திருக்குமானால், மீண்டும் மேய்வதற்கு வசதியாக கயிற்றை தளர்த்திவிடுவான். அந்த மாடு சோம்பேறியாக புற்களை மேயாமல் படுத்திருக்குமானால், அதை அப்படியே விட்டுவிட்டு சென்று விடுவான். அதுபோலவே, நாம் மேலும் மேலும் சாதனைகளில் முன்னேற்றம் அடைய, அதற்கான வழிகளை பகவான் அவ்வப்பொழுது அருளுவான் .

*கேள்வி : பக்தியை வளர்த்துக் கொள்வது எப்படி?*

பதில் : குஷ்டரோகிகள் பலர் உள்ள இடங்களில் ஒருவன் அடிக்கடி சென்று வருவதால், எப்படி அவனை அறியாமலேயே அவனை வ்யாதி தொற்றிக் கொண்டுவிடுகிறதோ, அது போலவே, ஸாதுக்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று, அவர்களை நாம் ஸேவித்து வந்தால், நம்மையறியாமலேயே ஞான, பக்தி வைராக்கியங்கள் நம்முள் வளரும்.

*கேள்வி : "ஒருவன் வைராக்யத்துடன் இருப்பதால், மற்றவர்களிடம் வெறுப்புடன் நடந்து கொள்கிறான்" என்று கூறுகிறார்களே. இது சரியா?*

பதில் : ஒருவன் ஶ்ரமப்பட்டு வைராக்யங்களை மேற்கொண்டால், இதை இன்னும் புரியும்படி சொல்லவேண்டும் என்றால் - ஒருவருடைய கட்டாயத்தின் பேரிலோ, அல்லது சில புத்தகங்களைப் படித்தோ, உலக விஷயங்களில் தீவிர ஈடுபாடுகள் இருந்தும், நிர்பந்தத்தின் பேரில், வைராக்யங்களை அப்யாஸத்தில் கொண்டு வந்தால், அது வெறுப்பாக மாறுவதற்கு ஸந்தர்ப்பம் உள்ளது. ஆனால், ஒருவனுக்கு வைராக்யம் என்பது ஸ்வபாவமாகவே வந்து விட்டால், அது வெறுப்பாக மாறாது. அது மட்டும் இல்லாமல், ஒரு பெரிய மனஶாந்தியையும் அளித்துவிடும். ■

# வேத கதைகள் - 13

- தர்மக்ஞர், வான்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள்

## கர்ப்பப் பை எடுத்தல்

யக்ஞபுருஷன் தக்ஷிணா என்ற பெண்ணை விரும்பினான். யக்ஞத்திற்கு தக்ஷிணைதான் மனைவி என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளது.

*யக்ஞோ கந்தர்வ : தஸ்ய தக்ஷிணாப்ஸரஸ:*

என்று வேதத்தில் உள்ளது.

***"அத்வரஸ்யேவ தக்ஷிணா"*** என்று காளிதாஸனும் கூறியுள்ளான். யக்ஞபுருஷன் தக்ஷிணாவை கைப்பிடித்தான். அப்பொழுது, "இவளிடமிருந்து எவன் பிறக்கிறானோ அவனே உலகில் உள்ள எல்லா செல்வத்தையும் அடைவான்" என்று இந்திரன் எண்ணினான். உடனே, தானே அவள் உட்புகுந்து வெளிவந்தான். இவளுக்கு மறுபடியும் கர்ப்பம் ஏற்பட்டு மற்றொரு பிள்ளை பிறந்தால் தனக்கு செல்வத்தில் முழுமையான பங்கு இல்லாமல் போய்விடுமே என்று இந்திரன் மேலும் எண்ணினான். உடனே அவள் வயிற்றில் புகுந்து அவளுடைய கர்ப்பப் பையை அகற்றினான். அதனால் தக்ஷிணா, ஒரு தடவை பிள்ளைப் பெற்று பிறகு மலடியாக ஆனாள். அவளுக்கு "ஸூதவஸா" என்று பெயர். யக்ஞபுருஷன் அவள் உடலிலிருந்து அகற்றப்பட்ட கர்ப்பப் பையை கையில் சுற்றினான். பிறகு, அதை மான்களின் தலையில் வைத்தான். அதே மான்களின் கொம்பாகவும் ஆயிற்று.

இந்த வேதக் கதையைப் பின்பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் மருத்துக்களின் பிறப்பு என்று ஒரு உபாக்யானம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

கஶ்யபருக்கு அதிதி, திதி என்ற இரு மனைவிகள் இருந்தனர். அதிதியின் பிள்ளைகள் தான் தேவர்கள். திதியின் பிள்ளைகள் தைத்யர்கள். தேவர்களுக்கும் தைத்யர்களுக்கும் அடிக்கடி போர் ஏற்பட்டு, அதில் தேவர்கள் இந்திரனுடைய தலைமையில் வெற்றியடைந்தார்கள். தைத்யர்கள்தான் அரக்கர்கள் எனப்படுகிறார்கள்.

தன் பிள்ளைகளான அரக்கர்களுக்கு அடிக்கடி தோல்வியளிக்கிற இந்திரனை ஒழிக்க, தனக்கு ஒரு பிள்ளை பிறக்க வேண்டும் என்று திதி எண்ணினாள். அதற்காக தன் கணவரான கஶ்யபரையும் வேண்டினாள். அவர், ஒரு வருடகாலம் அவளுக்கு சில கடுமையான நியமங்களை போதித்து, ''அவைகளைக் கடைப்பிடித்தால் நீ விரும்பியவாறு பிள்ளை பிறப்பான்,'' என்று அருளினார்.

திதியும் அந்த நியமங்களை நன்கு அனுஷ்டித்தாள். அவளுக்கு கர்ப்பம் ஏற்பட்டு கர்ப்பிணியாக இருக்கும்பொழுதும் நியமங்களை விடாமல் கடைப்பிடித்தாள். அந்த நியமனங்களில், பகலில் தூங்கக்கூடாது; தலைவைக்கும் இடத்தில் கால் வைத்து படுக்கக்கூடாது என்று இருக்கிறது. திதியானவள், தன்னைக் கொல்வதற்காக ஒரு பிள்ளையை விரும்பி கடுமையான நியமங்களை அனுஷ்டித்து வருகிறாள் என்று இந்திரன் அறிந்து, அவளை அணுகினான். திதியும் இந்திரனுக்கு சிறிய தாய் ஆவாள். ''கடுமையான தவம் புரிகின்ற உனக்கு நான் உதவி புரிகின்றேன்,'' என்று ப்ரியமான வார்த்தைகளைப் பேசி அவளுக்கு உதவி புரிந்தான். அந்த ஸமயத்தில், அவளுக்கு உதவியும் தேவைப்பட்டது. ஆதலால் திதியானவள் இந்திரன் உதவியை ஏற்றுக் கொண்டாள்.

பிள்ளை பிறப்பதற்கு சில காலம் இருக்கும் பொழுது ஒரு நாள், அவள், பகலில் கால் வைக்கும் இடத்தில் தலை வைத்து படுத்துக் கொண்டு தூங்கினாள். இந்த ஸமயத்தில், இந்திரன் அவள் வயிற்றில் புகுந்து அவள் கர்ப்பத்தை ஏழு துண்டுகளாக வெட்டினான். பிறகு அந்த ஒவ்வொன்றையும் மேலும் ஏழு துண்டுகளாக ஆக்கினான். அவைகள், உயிருள்ளவைகளாக இருந்ததால் அழுதன. அவைகளைப் பார்த்து இந்திரன் 'மாருத: மாருத:' என்று கூறினான். மாருத: என்றால் அழாதே என்று பொருள். காஶ்யருடைய அருளால் அந்த கர்ப்பம் ஏற்பட்டதால் நாற்பத்தி ஒன்பதாக வெட்டியும் அவைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படவில்லை. அவைகளினிடத்திலும் இந்திரன் இன்சொல் கூறினான். அதனால், இந்த 49 குழந்தைகளும் இந்திரனுக்கு நண்பர்களாகவே ஆகின.

இந்த கலவரத்தில் விழித்துக் கொண்ட திதி, நடந்தது என்னவென்று அறிவதற்கு முன்பே இந்திரன் வெளிவந்தான். 'உனக்கு ஒரு பிள்ளை வேண்டும் என்று எண்ணம் இருந்தது. இப்பொழுது நாற்பத்தி ஒன்பது குழந்தைகளாக ஆகின. அவர்களையும் எனக்கு நண்பர்களாக ஏற்படுத்திக் கொண்டேன்' என்று இந்திரன் கூறினான். திதியும் அதை ஒப்புக் கொண்டாள். இவ்வாறாக உருவாகியவர்கள்தான் மருத்கணங்கள் எனப்படுகின்றனர்.

*ஸப்த கணாவை மருத :*

ஏழு கணங்கள். ஒவ்வொரு கணத்திலும் ஏழு நபர்கள். இவ்வாறு மருத்கணங்கள் நாற்பற்றியொன்பதாகும். இந்த 49 மருத்துக்களுக்கும் யஜூர் வேதத்தில் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இந்த புராணக்கதை, முன் கூறிய வேத கதையைப் பின்பற்றி வந்துள்ளது. தற்சமயம் கர்ப்பப் பை எடுப்பது என்பது இந்த வேதக் கதையை அனுசரித்ததே ஆகும். ■

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

''ப்ரேமிக பவனம்''

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை,

சென்னை - 600 083.

# எந்தரோ மஹானுபாவுலு - 1

வேதத்தை ஆதாரமாகக் கொண்ட நம்முடைய ஸநாதன மதத்திற்கு ஸ்ரீ ஆதிஶங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர் போன்ற மஹாத்மாக்கள் ஆற்றிய தொண்டுகள் மிகவும் மகத்தானது. அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பல மடங்களில், பிற்காலத்தில் அவர்களைப் போலவே அவர்களுக்கு துல்யமாக அநேக மஹாத்மாக்கள் அவதரித்துள்ளார்கள்.

மத்வ பரம்பரையில், அவரால் ஸ்தாபிக்கப்பட்ட பீடத்தில் அவதரித்த ஒரு மஹான் ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள். இவருடைய சரித்ரம் மிகவும் ஆச்சர்யகரமானது. படிப்பவர்களையும் கேட்பவர்களையும் பரவசப்படுத்தக் கூடியது. இவர், மந்த்ராலயத்தில் ஜீவ ஸமாதியாகி, இன்று வரை பல பக்தர்களுக்கு அருள் பாலித்து வரும் ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகளின் பரமகுருவும் ஆவார்.

ஸ்ரீ விஜயீந்த்ரர், ஸ்ரீ மூலராமனின் பரமபக்தராய் இருந்து கொண்டு தனது அனுஷ்டானங்களால் மஹா தபஸ்வியாக விளங்கியவர். விஜயநகர மன்னர்களுக்கும், தஞ்சாவூர் மன்னர்களுக்கும் ராஜ குருவாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார். இப்பேர்பட்ட மஹாத்மாவின் அழியாப் புகழ் வாய்ந்த சரித்ரத்தையும் அவர் உலக நன்மைக்காகச் செய்த ஸத்காரியங்களையும், நற்குணங்கள் நிரம்பிய அவரது பெருமைகளை விளக்கும் நிகழ்ச்சிகள் முதலியவற்றை ''அஜேய விஜயீந்த்ரர்'' என்னும் கன்னட நூலில் விவரமாக அளிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராகவேந்த்ர மடத்தின் பீடாதிபதியாக இருந்த ஸ்ரீ விஜயீந்த்ர தீர்த்தரின் குருவான ஸ்ரீ ஸுயமீந்த்ர தீர்த்தரின் புதல்வரான மத்வஸ்ரீ ராஜா குருராஜாசார்யர் என்பவர்தான் இந்த ''அஜேய விஜயீந்தரர்'' என்னும் நூலை இயற்றிய பெரியவர்.

விஜய நகர ஸாம்ராஜ்யத்தில், ஸ்ரீ வ்யாஸராஜ ஸ்வாமிகள் ராஜ குருவாக விளங்கிய நேரம் அது. ஒரு நாள், அவர் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு அர்ச்சனை செய்ய துளஸீக் குடலையை எடுத்த பொழுது, அந்த துளஸீ முழுவதும் ஏற்கனவே அர்ச்சனை செய்யப்பட்டு நிர்மால்யமாகி இருப்பதை உணர்ந்தார். உடனே, ஸ்வாமிகள் தன் ஞான த்ருஷ்டியால் ஸ்ரீ மத்வாசார்யரின் ஞான ஸிம்ஹாஸனத்தை அலங்கரித்த, யதிராஜர்களின் நேர் பரம்பரையில் அவதரித்து, அப்பொழுது ஞான பீடத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ ஸுரேந்த்ரதீர்த்தர், அன்று தோட்டத்திற்கு விஜயம் செய்து அங்கு துளஸீ செழிப்பாக இருப்பதைக் கண்டு ஆனந்தப்பட்டு ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம் என மானஸீக பூஜை செய்திருப்பதால் இங்ஙனம் நடந்திருக்கிறது என்று அறிந்து கொண்டார்.

உடனே அவர், விஜயநகர மாமன்னர் ஸ்ரீ க்ருஷ்ண தேவராயரை நோக்கி, ''உமது பாக்யத்தினால் இப்பொழுது ஞான பீடத்திலிருக்கும் ஸ்ரீ ஸுரேந்த்ரதீர்த்தர் நம் நாட்டிற்கு விஜயம் செய்துள்ளார். அவரை தகுந்த மரியாதைகளுடன் நாம் சென்று வரவேற்போம்'' என்று கூறினார். மன்னரும் அதன்படியே, ராஜகுருவுடன் பரிவாரங்களுடன், பக்த கோடிகளுடன் சென்று ஸ்ரீ ஸுரேந்த்ரதீர்த்தரை எதிர்கொண்டு அழைத்து வந்து வ்யாஸராஜ மடத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

மறுநாள், ஸ்ரீ வ்யாஸராஜ ஸ்வாமிகளும் ஸ்ரீ ஸுரேந்த்ரதீர்த்தரும் த்வாதஸீ பூஜைகளை ஒரே மேடையில் நடத்தினார்கள். அவர்களுக்கு எதிராக மன்னரும், ஸ்ரீ வாதிராஜரும், ஸ்ரீ புரந்தரதாஸர், ஸ்ரீ கனகதாஸர் மற்றும் பல முக்கிய சிஷ்யர்களும் அமர்ந்திருந்தனர். அவர்களுடன் ஸ்ரீ வ்யாஸராஜரின் அன்புக்கு பாத்திரமான ஸ்ரீ விஷ்ணுதீர்த்தர் என்ற பால துறவி ஒருவரும் கை கூப்பிக் கொண்டு அமர்ந்திருந்தார். அவருடைய முகத்தில் அத்புதமான தேஜஸ் ஒளி வீசியது. அந்த அழகிய காந்த முகத்தைக் கண்டதும் ஸ்ரீ ஸுரேந்த்ரர் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு அவர், தீவிர த்யானத்தில் ஆழ்ந்து விட்டார். இதை பார்த்துக் கொண்டிருந்த அனைவருக்கும் ஒன்றுமே விளங்கவில்லை. துவாதஸீ பாரணை முடிந்து எல்லோரும் விஶ்ராந்தி எடுத்துக் கொண்ட பிறகு, ஸ்ரீ வ்யாஸராஜர், அரசனுக்கு சொல்லும் வ்யாஜமாக, பூஜை நேரத்தில் மர்மமாக ஸ்ரீ ஸுரேந்த்ரர் தியானத்தில் ஆழ்ந்திருந்ததைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தார்.

அப்பொழுது ஸ்ரீ ஸுரேந்த்ரர், ''என்னுடைய பரமகுருவான ஸ்ரீ விபுதேந்த்ரதீர்த்தரே மறுபடியும் ஸ்ரீ விஷ்ணுதீர்த்தராக அவதரித்திருக்கிறார். ஸ்ரீ விபுதேந்த்ரதீர்த்தர் தன்னுடைய சிஷ்யர் ஸ்ரீ பாதராஜருக்கு ஸகல வித்யைகளையும் தானம் செய்தார். அவர் தனது சிஷ்யனான எனக்கு அந்த வித்யா பொக்கிஷத்தை அருளினார். ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரையே என்னுடைய பரமகுருவாக அறிந்தவுடன், நான் அந்த வித்யா நிதியை மறுபடியும் உடையவரிடமே சேர்ப்பித்து விட்டேன்'' என்று கூறி, ''ஞான பக்தி வைராக்யங்களுடன் சூரியன்போல் பிரகாசிக்கும் இந்த ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரை எனக்கு பிக்ஷையாக தந்துவிடும்!'' என்று வேண்டினார். உடனே ஸ்ரீ வ்யாஸராஜர் ஸ்வாமிகளும், ''நானும் இந்த புண்ய தினத்தை எதிர்நோக்கித்தான் இருந்தேன். இன்று எனக்கு இந்த பாக்யம் கிடைத்தது பற்றி மிகவும் ஆனந்தம்!'' என்று கூறி ஸ்ரீ விஷ்ணுதீர்த்தரை ஸ்ரீ ஸுரேந்திரரிடம் ஒப்படைத்தார். உத்தமமான சிஷ்ய ரத்னத்தை பெற்று மகிழ்ந்த ஸ்ரீ ஸுரேந்திரதீர்த்தர், தமது புதிய சீடரை பட்டாபிஷேகம் செய்வித்து ஸ்ரீ விஜயீந்த்ரர் என நாமகரணம் செய்தார்.

நாமகரணம் ஆன அன்றே நவத்வீபத்திலிருந்து வந்த ஸ்ரீ க்ருஷ்ண சர்மா என்ற பண்டிதர், சபைக்கு வாதம் செய்ய வந்தார். ஸ்ரீ வ்யாஸராஜர், ஸ்ரீ விஜயீந்த்ரரை வாதம் செய்ய ப்ரேரணை செய்து அனுப்பினார். வாதத்தில் வென்று, தனது திறமையினால் ''அஜேய (ஜயிக்க முடியாத) விஜயீந்த்ரர்'' என்று பண்டித சிரோன்மணிகளால் கௌரவிக்கப்பட்டார். அஷ்ட உடுப்பி மடங்களில் ஸோதே மடத்தைச் சார்ந்த ஸ்ரீ வாதிராஜர் ஸ்ரீ விஜயீந்த்ரருக்கு ஒரு தனி மடம் ஏற்பாடு செய்து அதை தானமாக வழங்கினார். இன்றும், ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகளின் ப்ருந்தாவனத்துடன் ஸ்ரீ க்ருஷ்ணன் கோயிலின் வாயிலுக்கு இடதுபுறம் கடைசியில் அந்த மடம் ப்ரகாசித்துக் கொண்டு இருக்கிறது. ஸ்ரீ வ்யாஸராஜர் தன் அன்பு சிஷ்யரை வெகுவாக ஆசிர்வதித்து, ''இவர் கீர்த்திமானாக ப்ரகாசிப்பார். நம் மடங்களின் பெருமையை உயர்த்துவார்'', என்று ஸ்வஸ்தி வசனம் கூறி ஸ்ரீ ஸுரேந்திரருடன் பிரியா விடை கொடுத்து அனுப்பினார்.

ஸ்ரீ விஜயீந்திரரும், ஸ்ரீ ஸுரேந்திரரும் நாகலாபுரம் வழியாக தஞ்சை வந்தடைந்தனர். அங்கு, மன்னர் சிவப்பநாயகர் இருவரையும் மரியாதையுடன் வரவேற்று உபசரித்து சிறப்பு விருந்தினராக ஆதரித்தார். அது சமயம், கும்பகோணத்தில் ஸ்ரீ லிங்கராஜு என்ற சைவ ஸன்யாசி தனது வித்வத் திறமையாலும், மந்திர சக்தியாலும் வைஷ்ணவ மதத்தை அடக்கி எல்லா கோயில்களின் நிர்வாக அதிகாரத்தை தன்னிடம் வைத்திருந்தார். அவரை வாதத்தில் வெல்ல இயலாமல், வைஷ்ணவர்கள் தஞ்சையில் தங்கியிருந்த ஸ்ரீ விஜயீந்த்ரரிடம் ஒரு கோஷ்டியை தூது அனுப்பி, ஸ்ரீ லிங்கராஜுவை வாதத்தில் வென்று வைஷ்ணவத்தை புனருத்தாரணம் செய்து ஸ்தாபிக்க வேண்டும் என்று முறையிட்டுக் கொண்டனர். மௌனமாக இருந்த ஸ்ரீ விஜயீந்த்ரரிடம் ஸ்ரீ ஸுரேந்திரர், ''சிஷ்ய ச்ரேஷ்டரே, யோசனை வேண்டாம். கும்பகோணம் சென்று வெற்றியுடன் திரும்பி வாரும்'', என்று ஆசீர்வதித்தார். அன்றிரவு, கும்பகோணத்தின் க்ஷேத்ர மூர்த்தியான ஸ்ரீ மங்களாம்பாள் ஸ்ரீ விஜயீந்த்ரரின் முன் தோன்றி தன் கழுத்தில் இருந்த சம்பகப் பூமாலையை அவருக்கு அணிவித்து, ''சஞ்சலப்படாதே, நான் பக்கபலமாய் இருப்பேன். வாதத்தில் வெல்வாய்'' என்று ஆசீர்வதித்தார். கனவு கலைந்ததும் தன் கழுத்தில் மாலை இருப்பதைக் கண்டு, தன் குருவிடம் ஸ்ரீ விஜயீந்த்ரர் ஓடி வந்தார். குருதேவனே தான் ஏற்கனவே அந்த காட்சியை கண்டு களித்துவிட்டதாகக் கூறி, ''இனி என்ன தயக்கம்? கும்பகோணம் சென்று வென்று வருவீர்!'' என்று பணித்தார். ஸ்வாமிகளும் குடந்தையை அடைந்தார்..........

(தொடரும்)

# ஶ்ரவண பக்தி

ஸ்ரீமத் பாகவதத்தில், பரம பாகவதோத்தமனான ப்ரஹ்லாதனைப் பார்த்து அவனுடைய பிதா ஹிரண்யகசிபு, 'நீ படித்த படிப்பில் உயர்ந்ததான படிப்பு எது' என்று வினவ, ப்ரஹ்லாதன் அதற்கு, ''நாராயணனையே பக்தி செய்வதுதான் நான் படித்த படிப்பிலேயே உயர்ந்த படிப்பாகும்'' என்று பதிலுரைத்தான். அந்த பக்தியில் ஶ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாத ஸேவனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதனம் என்று ஒன்பது விதமாக இருக்கின்றன. அதில் ஶ்ரவண பக்தி தான் மிகவும் உன்னதமானதாகும்.

மற்ற பக்தி மார்க்கத்தில், தன்னையும் தன்னுடைய இந்த்ரியங்களையும் செலுத்தினால்தான் அதில் ஈடுபடமுடியும். ஆனால், ஶ்ரவண பக்திக்கு எந்த விதமான முயற்சியும் தேவையில்லை. இதைப்பற்றி வேதத்தில் சொல்லும்பொழுது,

*"கர்ணாப்யாம் பூரிவிஶ்ருவம்"*

காதுகள் இரண்டினால் மிகவும் அதிகமான பகவத் விஷயங்களை, ஸத்விஷயங்களை கேட்க வேண்டும் என்று கூறுகிறது.

மனிதரின் ஒவ்வொரு இந்திரிய விஷயங்களும் இயக்குபவனுடைய இயக்கத்தினால் • இயங்குகிறது. ஶ்ரோத்ர இந்த்ரியமானதோ தானாகவே இயங்குகிறது. ஆதலால், கர்ணம் படைத்தவர்கள், கேட்கக்கூடிய தன்மை உடையவர்கள், தானாகவே இயங்கக் கூடிய ஶ்ரோத்ர இந்த்ரியத்தை அஸத் விஷயத்தில் ஈடுபடுத்தாமல் ஸத்கதா ஶ்ரவணத்தில் ஈடுபடுத்த வேண்டும். அப்படி ஸத்விஷயங்களை கேட்கக்கூடியதுதான் ஶ்ரவண பக்தி என்பது! ஶ்ரவண பக்தியினால் அநேகர் ஸத்கதி அடைந்துள்ளார்கள்.

ஸ்ரீமத் பாகவதத்தில், பரிக்ஷித் மஹாராஜா, கங்கா தீரத்தில் ப்ரஹ்ம நிஷ்டரான ஸ்ரீ ஶுகாசார்யாளின் முகத்திலிருந்து அம்ருதமாக வந்த ஸ்ரீமத் பாகவதத்தை ஸப்தாஹ க்ரமத்தில் ஏழு நாட்கள் கேட்டு ஶ்ரவண பக்தியினால் வைகுண்டத்தை அடைந்தான்.

மற்ற பக்திகளைவிட ஶ்ரவண பக்திதான் மிகவும் உயர்ந்தது. ஆதலால் உத்தமமான பக்தியைப் பற்றி ப்ரஹ்லாதன் சொல்லும் பொழுது ஒன்பது வித பக்தியில் ஶ்ரவண பக்தியைத்தான் முதலில் சொல்கிறான்.

**ஸ்ரீ T. கண்ணன் தீக்ஷிதர்**

# கேட்பதில் மூன்று விதம்

ஸ்ரீ க்ருஷ்ணதேவராயர் அரசாட்சி செய்யும் காலத்தில், தெனாலிராமன் என்பவர் அவருடைய அரசபையில் மந்திரியாக இருந்தார். அரசருடைய ப்ரியத்திற்கும் மதிப்பிற்கும் பாத்ரமாக அவர் இருந்தார். இதைக் கண்ட மற்றவர்கள், தெனாலிராமனிடம் பொறாமை கொண்டார்கள். இதை கவனித்த அரசர், தெனாலிராமனின் புத்தி அபூர்வமானது என்பதை நிரூபிக்க ஒரு பரிக்ஷையை ஏற்பாடு செய்தார்.

ஒரு நாள், எல்லா மந்திரிகளையும் ராஜ சபையில் அழைத்து இப்பொழுது உங்களுக்கு ஒரு பரிக்ஷை வைக்கப் போகின்றேன். அதில் வெற்றி பெறுபவர்களுக்கு ராஜ ஸன்மானம் அளிக்கப்படும் என்று கூறினார். எல்லோரும் ஸன்மானத்தை அடைய விரும்பினார்கள். ஸபையின் நடுவில் மூன்று பொம்மைகள் கொண்டு வரப்பட்டன. அவை மூன்றும் ஒரே உருவத்தில் இருந்தது. ராஜா அனைவரையும் பார்த்து, 'இந்த மூன்று பொம்மைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு தனிப்பட்ட விஷயம் உள்ளது. அது என்ன என்பதை அறிந்து விளக்குபவர்களுக்கு ராஜ ஸன்மானம் தரப்படும்' என்று கூறினார்.

அங்கிருந்த அனைத்து மந்திரிகளும் மூன்று பொம்மைகளையும் எடுத்துப் பார்த்தார்கள். அவை ஒரே மாதிரியாக இருந்தது. அதன் வித்யாசத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. ராஜா சொன்ன சூக்ஷ்மத்தை அறியமுடியாமல் வெட்கத்துடன் திரும்பினர். அரசன், தெனாலிராமனைக் கூப்பிட்டு, ''உம்மால் இந்த பொம்மைகளில் உள்ள வித்யாசத்தைச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார். தெனாலிராமன் மிகவும் பணிவுடன், 'முயற்சி செய்து பார்க்கிறேன்' என்று கூறி, பொம்மைகளை உற்று நோக்கி வெகு நேரம் யோசித்து பிறகு ராஜாவிடம் பேசலானார்.

ராஜ சபையில் உள்ளவர்கள் அனைவரும் தெனாலிராமன் என்ன கூறப்போகிறார் என்று ஆவலுடன் இருந்தார்கள். தெனாலிராமன் அப்பொழுது கனமில்லாத ஒரு இரும்பு கம்பியைக் கொண்டு வரச் சொன்னார். அதை ஒவ்வொரு பொம்மையின் காதிலும் செலுத்தினார். முதல் பொம்மையின் காதில் அந்த கம்பியைச் செலுத்தியபொழுது அது மற்ற காது வழியாக வெளியே வந்தது. அடுத்த பொம்மையின் காதில் அந்த கம்பியைச் செலுத்தியபொழுது அது வாய் வழியாக வந்தது.

மூன்றாம் பொம்மையின் காதில் செலுத்திய பொழுது அது ஹ்ருதய ஸ்தானத்திற்குச் சென்றுவிட்டதால் வெளியே வரவில்லை. ''இதுதான் இந்த பொம்மைகளிடம் உள்ள வித்யாசம்'' என்று கூறி இது நமக்கு அறிவுறுத்தக் கூடிய பாடம் என்று மேலும் கூறத் தொடங்கினார். 'எல்லோரும் காது வழியாகத்தான் விஷயங்களை கேட்கிறோம். அதுபோல்தான் இந்த பொம்மைகளின் காதில் கம்பி விடப்பட்டது. அதில் ஒரு வகையினர், தான் கேட்டதை மற்ற காதால் அப்பொழுதே விட்டு விடுகின்றனர்' இதைத்தான் முதல் பொம்மையில் நாம் கண்டோம். கம்பி மற்ற காதுவழியாக வெளிவந்துவிட்டது.

மற்றொரு வகையினர் காதால் விஷயத்தைக் கேட்டு அதை மற்றவர்களுக்குச் சொல்கிறார்கள். இரண்டாம் பொம்மையில் காது வழியாக சென்ற கம்பி வாய் வழியாக வந்தது இதைக் குறிப்பிடுகிறது. மூன்றாம் வகையினர் தன் காதில் கேட்ட விஷயங்களை மனதிற்குச் செலுத்தி அந்த விஷயத்தை புத்தியினால் பிரித்து நல்ல விஷயத்தை தன் நடைமுறையில் கொண்டு வருகிறார்கள். இதுதான் மூன்றாம் பொம்மையின் காதில் செலுத்தப்பட்ட கம்பியானது காது வழியாகவும் வாய் வழியாகவும் வராமல் ஹ்ருதய ஸ்தானத்திற்குச் சென்றது. இவ்வாறு விஷயத்தைக் கேட்பவர்கள் மூன்று விதமாக இருக்கிறார்கள் என்று தெனாலிராமன் எடுத்துக் கூறினார். அப்பொழுது ராஜா உட்பட அனைவரும் தெனாலிராமனின் புத்தி கூர்மையை மெச்சினர்.

ராஜாவும் தக்க சன்மானங்களை தெனாலிராமனுக்கு அளித்தார். இந்த கதையின் மூலம் நாம் ஸத்விஷயங்களை மனதிற்குச் செலுத்தி அவற்றின் ஸாரத்தை எடுத்துக் கொண்டு நமது நற்குணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று தெரிகிறது.

**ஸ்ரீ T. கண்ணன் தீக்ஷிதர்**

---

*ஶங்கர ஸ்ம்ப்ரதாயத்தில் பிறந்ததாலேயே சிலர் அத்வைதம்தான் சரி என்றும், ராமானுஜ ஸம்ப்ரதாயத்தில் பிறந்ததாலேயே விஶிஷ்டாத்வைதம் தான் சரி என்றும், மத்வ ஸம்ப்ரதாயத்தில் பிறந்ததாலேயே த்வைதம்தான் சரி என்றும் கூறுகிறார்கள். இவைகளில் எது சரியோ எனக்குத் தெரியாது. ஆனால், அனைவருக்கும் நாமகீர்த்தனம்தான் சரி என்பது மட்டும் எனக்கு சரியானதாகத் தோன்றுகிறது.*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# பாவ லோகத்தில் ஒரு ஸஞ்சாரம்

ஒரு நாள் அந்தி வேளையில், நான் கோபாலனுக்கு அலங்காரம் செய்து கொண்டிருக்கும் பொழுது, ''லலிதா!'' என்ற குரலைக் கேட்டவுடன் திரும்பிப் பார்த்தேன். விஷ்ணுப்ரியா என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அப்பொழுது எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை! ப்ரியமானவர்களைப் பார்க்க நேரிட்டால் இந்த மனதுதான் எப்படி ஆனந்தத்தில் துள்ளுகின்றது! ப்ரேமைக்குள்ள சக்தியே தனிதான். அது அநிர்வசனீயமானது.

விஷ்ணுப்ரியா என்னைப் பார்த்து, ''லலிதா! உனக்கு எப்பேர்ப்பட்ட க்ருஷ்ண பக்தி ஸித்தித்துள்ளது!'' என்று கூறினாள். நான் அதற்கு, ''உனக்கு மட்டும் என்ன?'' என்று கூறிக் கொண்டே அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு நந்தவனத்திற்கு அழைத்துச் செல்லலானேன். விஷ்ணுப்ரியா, என்னைப் பார்த்து, ''நமக்கு இப்பேர்ப்பட்ட க்ருஷ்ண பக்தி ஸித்திப்பதற்கு குருவின் க்ருபைதான் காரணம். ஆகவே இதில் நாம் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு என்ன உள்ளது?'' என்றாள். நானும், ''நீ சொல்வது சரிதான். குருவை ஆஸ்ரயித்த பின் நம் வாழ்க்கைதான் எப்படி மாறிவிட்டது! எப்படியிருந்த நம்மை எப்படி மாற்றிவிட்டார்!'' என்று கூறி சந்தோஷப்பட்டேன். அவளும் அதையே ஆமோதித்தாள்.

தொடர்ந்து, விஷ்ணுப்ரியா பேசலானாள். ''உனக்கு தெரியுமா லலிதா! நான் சிறு குழந்தையாக இருக்கும் பொழுதே மிகவும் பக்தியாக இருப்பேன். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு நித்யம் சென்று வருவேன். ஊரிலுள்ள எந்த கோவிலையும் விடமாட்டேன். எங்கெங்கு பூஜை, பஜனை, ஹோமம் எல்லாம் நடைபெறுகின்றனவோ, அங்கெல்லாம் சென்று வருவேன். யார் எதை சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடுவேன்.

ஆனால், இவைகள் எல்லாம் ஐந்து அல்லது ஆறு வயது வரைதான். அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உலகில் விவரம் தெரிய, பலருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பல புத்தகங்களைப் படிக்கும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது. அவைகளில் சில, உலகில் நடப்பனயாவற்றுக்கும் இயற்கைதான் காரணம் என்றும், கடவுள் என்பவர் இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் பறைசாற்றின. உலகில் காணப்படும் துக்கங்களும், வறுமையும், கலவரங்களும் என்னை வெகுவாக பாதித்தன.



கடவுள் இவைகளை எல்லாம் ஏன் சரி பண்ணாமல் இருக்கின்றாரென கேட்கத் தோன்றியது. உலகில் பலருடைய துக்கங்களைக் கண்டு ஸகித்துக் கொள்ளும் ஒருவர், கடவுளாக எப்படியிருக்க முடியும் என்ற கேள்வியும் என்னுள் எழுந்தது. அந்த ஸமயத்தில், பல ஸமய ப்ரசங்கிகள், இறை நாமம் பாடுபவர்கள் - இவர்களுடனும் எனக்கு பழக்கம் ஏற்பட ஆரம்பித்தது. இவர்களுடைய உபதேசங்களுக்கும், செயல்முறைகளுக்கும் ஸம்பந்தமே இல்லாமல் இருந்ததால், என்னுடைய கொஞ்ச நஞ்ச இறை நம்பிக்கையும் போய்விட்டது.

இறைவனை விடவும் முடியாமல், பிடித்துக் கொள்ளவும் முடியாமல் குழம்பி தவித்தேன். மேலும், இந்த குழப்பத்தை தாங்க முடியாமல், இறைவன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? நாம் நம்முடைய வாழ்க்கையில் முன்னேறும் வழியை பார்ப்போம் என்று பல திட்டங்களைப் போட்டு, அதை நடைமுறைப்படுத்த முயற்சித்து வந்தேன். ஆனாலும் இறைவனைப் பற்றிய சிந்தனை என்னை விடாமல் துரத்தியே வந்தது.

அப்பொழுது உண்மையான ஸாதுக்களின் ஸங்கம் எனக்குக் கிடைத்தது. அவர்களுடன் பழகும்பொழுது ''இறைவன் இருக்கின்றானோ இல்லையோ, இவர்கள் உத்தமர்கள், உண்மையில் இறைவன் இருப்பதாக நம்பி அதற்காக பாடுபடுபவர்கள்'' என்று தோன்றியது. அவர்கள் மேல் மரியாதையும் அன்பும் ஏற்பட்டது. அப்பொழுது என்னை அறியாமலேயே என்னுடைய மனது இறைவனைத் தேடுவதை உணர முடிந்தது. அவர்களிடம் ஒரு நாள், எனக்கு இறைவனை எப்படியாவது காட்ட வேண்டும் என்று பலவாறாக வற்புறுத்தி, கதறியழுது வேண்டினேன். அதற்கு அவர்கள், தாங்களும் இறைவனைத் தேடி வருபவர்களென்றும், இன்னும் தங்களுக்கே அந்த பாக்யம் கிடைக்கவில்லையென்றும் கூறிவிட்டார்கள். அவர்களுடைய உண்மை என்னை மேலும் கவர்ந்தது.

அப்பொழுது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். 'நான் இன்று பரிக்ஷை எழுதப் போகின்றேன். தாங்கள்தான் ஆசீர்வதிக்க வேண்டும்!' என்று அவர்களிடம் வேண்டுவேன். இது போல், பலவாறு உலக விஷயங்களை அவர்களிடம் கூறி அவர்களின் ஆசியை வேண்டி நிற்பேன். அவர்களோ, தங்களுக்கு அத்தகைய ஆசீர்வதிக்கும் சக்தி இல்லை என்றும், எனக்காக இறைவனிடம் ப்ரார்த்தித்துக் கொள்வதாகவும் கூறுவார்கள். ஆனால் அவர்கள், வினயத்தினாலோ, தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இஷ்டமில்லாத காரணத்தினாலோ தான் அப்படி கூறியிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

ஏனெனில், அவர்களிடம் நான் எதையெல்லாம் ப்ரார்த்தித்தேனோ அவைகளில் நடக்கவே முடியாது என்பவைகள் எல்லாம் கூட, நடந்தேறின!

என்னுடைய தொந்தரவு தாங்காமலோ என்னவோ, அவர்கள் ஒரு நாள் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் எங்கோ கிளம்பிச் சென்று விட்டார்கள். அவர்களின் எண்ணம் என்னை பலவாறாக வாட்டியது. ஆகாயம், சூரியன், சந்திரன், மரம், செடி, கொடி எல்லாவற்றிலும் அவர்களைத் தேடினேன். வேறு யாராவது ஸாதுக்களிடம் சென்றால் மன அமைதி கிடைக்குமா? என்று தேட ஆரம்பித்தேன். அங்கொருவர், இங்கொருவர், அவர் ராமரின் அவதாரம், அவர் க்ருஷ்ணரின் அவதாரம், அவர் தேவியின் அவதாரம் என்று பலர் பலவாறு கூறி, பல விலாசங்களையும் தந்தனர். ஆசையாக ஓடினேன். நான் பார்த்த பல பேர்களை விட நானே தேவலாம் என்று தோன்றி விட்டது! அவர்களிடம் ஆடம்பரமும் அஸத்தியமும், அட்டகாசமும்தான் காணப்பட்டன.

இந்நிலையில், கோயிலில் உள்ள இறைவனையே தஞ்சமடைந்தேன். ஆனாலும், அப்பொழுதெல்லாம் முதலில் எனக்காகவும், அன்றன்றுள்ள ப்ரச்சனைக்காகவும், என் எதிர்கால வாழ்க்கைக்காகவும் ஸதா ப்ரார்த்தித்துக் கொண்டே இருப்பேன். அவ்வப்பொழுது உலக நன்மைக்காகவும், பிறருடைய நன்மைக்காகவும் ப்ரார்த்தனை செய்வதுமுண்டு. நாம் ப்ரார்த்தனை செய்த விஷயத்தை இறைவன் ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக, இறைவன் மேலிருந்து ஏதாவது ஒரு பூ விழ வேண்டும் என்றும், கோவில் மணியடிக்க வேண்டும் என்றும் பலவாறு கெஞ்சுவேன். பூவும் விழாது, மணியும் அடிக்காது, கோவில் சாற்றும் வேளையாகிவிட்டது என்று அர்ச்சகர் வந்து விரட்டினால், இறைவனிடம் சென்று, 'பரவாயில்லை, நாளையாவது பூ விழ வேண்டும், மணியடிக்க வேண்டும்' என்று ப்ரார்த்தனை செய்து வருவேன்.

இப்படியிருக்கும் காலத்தில்தான், நான், குருவை இறைவன் அருளால் யத்ருச்சையாக தர்சனம் செய்தேன். பார்த்த முதல் தர்சனத்திலேயே என்னிடமிருந்து ஏதோ அவரிடம் சென்றது. அவரிடமிருந்து ஏதோ ஒன்று என்னிடம் வந்தது. 'கடவுள் இருக்கின்றாரா? எனக்கு காட்டுவீரா?' என்றெல்லாம் கேட்கலாம் என்றால், மனமே எழவில்லை. அடங்கிவிட்டது! பிறகு பேச்சு எப்படி வரும்? உடம்பெல்லாம் மின் அதிர்ச்சி! ஆனந்த பரவசம்! கடவுள் பார்க்கக் கூடியவரல்ல, உணரக் கூடியவர் என்பதை உணர்த்தியே காட்டிவிட்டார். சொல்லி புரிபவரல்ல என்பதை சொல்லாமலே சொல்லிவிட்டார்.

கடவுள் அடைய வேண்டியவரல்ல, அஹங்காரத்தை அகற்றினால் அகத்திலே இருப்பது கடவுள் என்பதை அகத்திலேயே அறியச் செய்தார். அவரையடைந்தபின், மனது ஒருமுகப்பட்டது, நம்பிக்கை ஏற்பட்டது. இறைவன் பிடிபட்டான். வாழ்க்கை பிடிபட்டது.

ஸமீபத்தில் என்னைப் பார்த்து, ஒருவர் தனக்கு ஏற்பட்டுள்ள சிரமத்திற்காக இறைவனிடம் ப்ரார்த்தனை செய்து கொள்ளச் சொல்லி வேண்டினார். நானும் பெரிதாக ஆமோதித்துவிட்டு கோவிலுக்குச் சென்று இறைவன் முன் நின்றேன். ப்ரார்த்தனையே செய்யத் தெரியவில்லை! நான் முன்பெல்லாம் எப்படி கெஞ்சுவேன், எப்படி அழுவேன், துடிப்பேன், இப்பொழுது ஏன் என்னால் முடியவில்லை? குருவை அடைந்தபின் ப்ரார்த்தனை என்பதே மறந்து விட்டது! என்ன காரணம்? காம்யமான விஷயங்களை ப்ரார்த்தனை செய்யக்கூடாது என்ற உபதேசத்தின் பலனா? அல்லது, நான் சொல்லித்தான் அவனுக்குத் தெரிய வேண்டுமா என்ற விவேகமா? அல்லது, குரு எனக்குத் தேவையே இல்லாத நிலையில் வைத்து விட்டாரா? வேண்டுதலுக்கான எண்ணம் உதயம் ஆகும் பொழுதே அவனுக்கு தெரிந்து விடுமே என்ற ஞானமா?.......

வேண்டினால் இறைவனையே கொடுத்து விடு என்றுதான் கேட்க வேண்டும், என்பதுதான் சரி. ஆனாலும், அதுவும் கேட்கத் தோன்றவேயில்லை, ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். சில பேரிடம் நிறைய பணமிருக்கும்; ஆனால் நிம்மதி இருக்காது. ஒருவரிடம் பணம் இருக்காது; ஆனால் பணக்காரனுடைய வசதியும் இருக்கும், அந்த ஸமயத்தில் அமைதியும் இருக்கும். ஒருவனிடம் ஶாஸ்த்ர விஷயங்கள் எல்லாம் எளிதில் பிடிபடும்; அதே போல் அனுபவத்திலும் ஸ்மரிக்கும். அதுபோலவே, நான் இறைவனைப் பார்த்தேனோ, பார்க்கவில்லையோ தெரியாது; ஆனால் இறைவனைப் பார்த்தவர்களுடைய அத்தனை நிலையும் எனக்கு வந்துவிட்டது போலுள்ளது'' என்றாள் விஷ்ணுப்ரியா.

விஷ்ணுப்ரியா சொல்லச் சொல்ல என் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாகவே இருந்ததை நினைத்து அப்படியே பிரமித்து நின்றேன். விஷ்ணுப்ரியாவும், ''லலிதா! என்ன ஆச்சு!'' என்று என்னை தட்ட, மெல்ல அவளை நோக்கி, புன்முறுவலுடன், ''நீ சொல்வதைப் பார்த்தால், பகவானிடம், வேண்டிக் கொள்வது எப்படி, என்றுதான் இனி வேண்டிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறதே!'' என்றேன். அவளும் அழகிய புன்முறுவலுடன் தலையசைத்து, ''இருட்டிவிட்டதே, நாளை பார்க்கலாம், ராதே க்ருஷ்ணா!'' என்று தன் க்ருஹத்தை நோக்கி நடை போடலானாள். ■

# பாலகர்களுக்கு ஒரு கதை - 8

ஸ்ருஷ்டியின் கடவுளான ப்ரஹ்மா, ஸ்ருஷ்டியின் ஆரம்ப காலத்தில் ஒரு மனுஷ்யனை தன் ஸமீபத்தில் அழைத்து, ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று மிகவும் ப்ரீதியுடன் கேட்டார். அதற்கு அந்த மனிதன், ''நான் நல்ல முறையில் ஸுகமாகவும், ஸந்தோஷமாகவும், ஶாந்தியுடனும் வாழ்வதற்கு ஆசைப்படுகின்றேன்'' என்று கூறினான். மேலும், ''நான் எப்படி இருந்தால் ஸுகமாக இருக்க முடியுமோ, அதற்கு ஏற்றாற்போல் அனுக்ரஹம் செய்ய வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டான்.

இதைக் கேட்ட ப்ரஹ்மா, அவனிடம் இரண்டு பைகளைக் கொடுத்து, ''ஒன்றில் உன்னுடைய பக்கத்து வீட்டில் இருப்பவருடைய கெட்ட குணங்கள் இருக்கின்றன. அதனால் அதை எப்பொழுதும் உன் பின்புறமாகவே வைத்துக் கொள். ஒருபொழுதும் அதை திறந்து பார்க்காதே. யாரிடமும் அதைக் காண்பித்து குறைக்கூறிக் கொண்டிருக்காதே. மற்றொரு பையை உன் முன்பாகவே வைத்துக் கொண்டு அடிக்கடி திறந்து பார்த்து வரவும். ஏனென்றால், இதில் உன்னுடைய துர்குணங்கள் இருக்கின்றன'' என்று கூறினார்.

அந்த மனிதனோ இரண்டு பைகளையும் பக்தியுடன் பெற்றுக் கொண்டு, அவைகளை வைக்கும் விஷயத்தில் மறதியினால் தவறு செய்து விட்டான்! தன்னுடைய துர்குணங்கள் நிறைந்த பையை பின்புறமும், மற்றவர்களுடைய துர்குணங்கள் நிறைந்த பையை முன்புறமும் மாற்றி வைத்து விட்டான்! பின்புறம் உள்ள பையை ஒரு பொழுதும் திறக்கவே மாட்டான். முன்புறம் உள்ள பையை அடிக்கடி பார்த்து மற்றவர்களிடமும் காண்பித்து குறைக் கூறிக் கொண்டிருந்தான். அதனால் அந்த மனிதனின் வாழ்க்கைமுறை, மனநிம்மதியற்றதாகவும், ஶாந்தியில்லாததாகவும், துக்கமயமாகவும் அமைந்துவிட்டது. அவன், தன்னுடைய குற்றத்தை அடிக்கடி நினைத்துப் பார்த்திருந்தால் கொஞ்சமாவது திருந்தி ஸுகமான வாழ்க்கைமுறையை அமைத்துக் கொண்டிருந்திருக்கலாம்.

இறைவனுடைய குழந்தைகளாகிய நாமனைவரும் மற்றவர்களுடைய குறைகளைப் பற்றி நினைப்பதையும், பேசுவதையும் விட்டுவிட்டு நம்மிடம் உள்ள குறைகளைப் பற்றி நினைத்து நம்மை கொஞ்சமாவது திருத்திக் கொண்டு ஸாத்வீகமான முறையில் வாழ முயற்சி செய்ய வேண்டும்.

உலகில் ஒவ்வொருவரையும் இறைவன்தான் இயக்குகின்றான், எல்லாரும் இறைவனுடைய குழந்தைகள் என்று பார்க்கும் பக்குவம் இருந்துவிட்டால் பிறரிடம் இருக்கும் குற்றம் நமக்கு தெரியாது. பகவான் நமக்கு இந்த்ரியங்களைத் தந்துள்ளதே, அவைகளை, அவன் விஷயத்தில் திருப்பி, அவனை அடைவதற்காகவேதான். மற்றவரிடம் உள்ள தோஷங்களைப் பார்க்காமல், குணங்களையே பார்க்க வேண்டும்.

மற்றவர்களின் தோஷங்களை நாம் பார்த்துக் கொண்டிருந்தால் அதே நினைப்பினால் அந்த தோஷங்களும் நம்மையறியாமலேயே நம்மை வந்தடையும். தோஷங்களுக்கு காரணமாவது அவரவருடைய பாபமாகும். ஆகவே, பிறருடைய தோஷங்களை நினைக்கும் பொழுது அந்த தோஷங்களுக்குக் காரணமான பாபங்களும் நம்மை வந்தடைகின்றன.

இதிலிருந்து, நாம் ஒருபொழுதும் பிறர் தோஷங்களை பார்க்கக்கூடாது என்று தெரிகிறது. ■

---

ஒருவன், தேள்கடி நிவர்த்திக்கான மந்த்ரத்தை ஸித்தி செய்து கொள்ள வேண்டும் என்றால், எப்பொழுதெல்லாம் அவனுக்கு அவகாசம் கிடைக்கின்றதோ அப்பொழுதெல்லாம் அந்த மந்த்ரத்தை ஜபம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அந்த மந்த்ரம் ஸித்தியாகும். அப்படியில்லாமல், ஒருவருக்கு ''தேள் கடித்து விட்டது'' என்று வரும்பொழுது மட்டும் அந்த மந்த்ரத்தை ஜபம் செய்வதால் நிவர்த்தி ஏற்படாது.

அதுபோல், நாம் சௌகர்யமாக இருக்கும்பொழுதே நாமாவை ஜபம் செய்யவேண்டும். அப்படி செய்தால் கஷ்டம் என்பதே வராது. ஒருக்கால் கஷ்டம் என்பது வந்தாலும் நாமா சொல்வதால் அது நீங்கிவிடும். கஷ்டம் வரும்பொழுது மட்டும் நாமாவை ஜபம் செய்வதைவிட இதுவே சிறந்ததாகும்.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 34

*"கேளாதளிக்கும் உன் கேடில் புகழைக்*
*கேடு செய்யாது அருள் அருணாசலா"* *22*

நாம் எதையும் ப்ரார்த்தனை செய்யாமலேயே, நமக்கு அருள் செய்வதே பகவானின் குணமாகும். பகவான் கேட்காமலேயே அளிக்கக் கூடியவன். நாம் வாழும் ஊரோ மிகச் சிறியது. இது மாதிரியான பல ஊர்கள் சேர்ந்ததே ஒரு மாநிலம். இதுபோல், பல மாநிலங்கள் சேர்ந்தது ஒரு நாடு. இதுபோல், பல நாடுகள் சேர்ந்ததே இந்த பூலோகம். இந்த பூலோகத்தில் நிலப்பரப்புகளைக் காட்டிலும், நீர் ப்ரதேசங்களே அதிகம். பஞ்ச பூதங்களினால்தான் இந்த ப்ரபஞ்சமே இயங்கிவருகிறது. பஞ்ச பூதங்கள், இயற்கையில் ஒன்றுக்கொன்று விரோதமானதும்கூட இருந்தும், அவைகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்குகின்றன.

இரவு வேளையில், சிறிது நேரம் நாம் ஆகாசத்தைப் பார்த்தோமானால், எண்ணற்ற நக்ஷத்ர மண்டலங்களையும், கோள்களையும் காண நேரிடுகின்றது. ஆனால், இதைப் பற்றி நாம் சிந்திப்பதே இல்லை. விஞ்ஞானிகளோ, நாம் பார்க்கும் சூரியனைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த பல சூரியன்கள் இருப்பதாகவும், ஆனால் அவைகள் பூமண்டலத்திலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால் கண்களுக்குத் தெரிவதில்லை என்பதாகவும் கூறுகிறார்கள்.

நம்முடைய ஶாஸ்த்ரங்கள், இவைகளைத் தவிர, சூக்ஷ்மமான ப்ரபஞ்சங்களைப் பற்றியும் அநேக விதத்தில் பேசுகின்றன. யோகிகளும், இவைகளை ஆமோதிக்கின்றார்கள். இந்த ஸ்ருஷ்டியில் ஒரு ஒழுங்கும், இயக்கமும் காணப்படுவதாலும், அந்த இயக்கம் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாலும், இந்த ப்ரபஞ்சம் இயற்கையினால் தோன்றியதாக இருக்க முடியாது. விவகாரத்தில் இந்த ப்ரபஞ்சத்தை நாம் ஏற்றுக் கொண்டோமானால், ஸ்ருஷ்டியையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எப்பொழுது ஸ்ருஷ்டியை ஏற்றுக் கொள்ள நேரிடுகிறதோ, அப்பொழுதே ஸ்ருஷ்டி கர்த்தாவையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அவனையே இறைவன் என்று வெகுவாக ஶாஸ்திரங்கள் கூறுகின்றன.

இறைவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும். பல கடவுள்கள், இருப்பார்களாயின், ப்ரபஞ்சத்தை படைக்கும் விஷயத்திலும், நடத்திச் செல்லும் விஷயத்திலும் முரண்பாடுகள் நேரிடக்கூடும். ஆகவே, இறைவன் ஒருவனே. அடைய வேண்டிய மார்க்கங்கள் பல இருப்பினும், அடைய வேண்டிய பொருள் ஒன்றே. பல நாமங்களால் அழைத்தாலும், அழைக்கும் பொருளுக்குரியவன் ஒருவனே. உலகத்தில் எத்தனை மதங்கள் இருந்தாலும், எத்தனை வழிபாட்டு முறைகள் இருந்தாலும், அவர்கள் அனைவரின் நோக்கமும் ஒன்றே, ஆதலால், இறைவனை ஏற்றுக் கொள்பவர்கள் அனைவரும் பாகவதர்களே. இவர்களுள் ஒருவருக்கொருவரை தாக்குவதும், ஏளனம் செய்வதும் பாகவத அபசாரமே ஆகும். இப்பேர்ப்பட்ட ப்ரபஞ்சத்தைப் படைத்து, நடத்திச் செல்லும் இறைவன், கேட்காமலேயே கொடுக்கக்கூடியவன். நாம் கேட்காமலேயே இந்த பெரிய ப்ரபஞ்சத்தை நமக்காக படைத்தான் அல்லவா?

ஒரு குழந்தை சிறிது நேரம் தூங்குமானால், அந்த தாயானவள் பார்த்துக் கொண்டிருப்பாள். அதே சமயத்தில், அந்த குழந்தை வெகு நேரம் தூங்கிக் கொண்டிருந்தால், அந்தத் தாய், குழந்தையை எழுப்பி அதை நீராட்டி உணவு கொடுப்பதுபோல், இறைவனும், அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த நம்மை எழுப்பி அவயங்களையும் கொடுத்து, இந்த ப்ரபஞ்சத்தையும் படைத்து, தன்னை அடைய பரம உபகாரம் செய்துள்ளார். ஆனால் இன்றைக்கும் பலர் இறைவனிடம் லோகாயதமான விஷயங்களுக்காகப் ப்ரார்த்தனை செய்வதை காண்கின்றோம்.

இப்படிப்பட்ட மக்களிலும் ஒருவர் கூட, நாளை காலை சூரியன் வரவேண்டுமே என்றோ, பூமி இதுபோல் விடாமல் சுழன்று கொண்டிருக்க வேண்டுமே என்றோ, மேலே உள்ள மண்டலங்கள் பூமியின் மேல் விழாமல் இருக்க வேண்டும் என்றோ ப்ரார்த்திப்பதாக காணோம்! இதற்கு ஒருக்கால், எல்லோருக்கும் ஏற்படுவதுதான் தனக்கும் ஏற்படப் போகிறது என்ற எண்ணம் காரணமாக இருக்குமோ என்றால், ஒரு மருத்துவமனையில், பலபேர் 'வியாதிகளால் பாதிக்கப்பட்டு வலியினால் துடிக்கின்றார்கள். இங்கு தனக்கு மட்டும் வலியில்லையே, எல்லாருக்கும் தான் வலி இருக்கின்றதே என்று இருக்க முடியாமல், அவரவர்களின் வலியினால் அவரவர்களுக்கு பாதிப்பு ஏற்படத்தான் செய்கிறதல்லவா?



ஸ்ரீ ப்ருந்தாவனத்தில், பக்தர்களுடன் ஸ்ரீ ஸ்வாமிகள்

எனவே இதற்குக் காரணம் விவேகம் அல்ல; சுயநலம் காரணமாக இருக்கலாம், அல்லது நாளை வரப்போகும் ப்ரச்சனைகளுக்குப் ப்ரார்த்தனை செய்வதைக் காட்டிலும், இன்று கண்முன் நிற்கும் ப்ரச்சனைகளைக் களைய, ப்ரார்த்தனை செய்வதே மனிதர்களின் சுபாவமாக இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆகவே, ப்ரார்த்தனை என்பதே விவேகமில்லாத ஒரு செயலோ என்று தோன்றுகிறது! பெரிய வயிறை வைத்துக் கொண்ட ஒரு யானை கூட எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஸந்தோஷமாக ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. ஒரு சாண் வயிற்றைக் கொண்டுள்ள மனிதனோ, அதை ரக்ஷிப்பதற்காக இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன் என்று இங்குமங்கும் ஆர்ப்பரிப்பதுதான் விசித்ரமாக உள்ளது.

(தொடரும்)

தொகுப்பு - **முரளீதரதாஸன்.**

---

நம்பிக்கை இல்லாவிட்டால் நம்முடன் இறைவனே வந்து நின்றால்கூட நாம், யாரோ என்று அலக்ஷியமாக இருந்து ஏமாந்து விடுவோம். நம்பிக்கை மட்டும் இருந்தால், கல்லிலேயே கூட இறைவன் தோன்றி பேசுவான்.

நம்பிக்கைதான் எல்லாவற்றுக்கும் ஆதாரம்.

குரு என்பவர், மேலே இனிப்பு தடவிய மருந்தாவார். ஆசைப்பட்டு அவசரமாக அந்த இனிப்பை வாயில் போட்டுக் கொண்டு விடுகின்றோம். பிறகு, அதை வெளியே துப்பவும் முடியாது. விழுங்கவும் முடியாது. மருந்து ஜீரணம் ஆகவேண்டும். சிஷ்யனுடைய அஹங்காரத்தையும் மமகாரத்தையும் அழித்த பின்னால்தான் அது செரிமானம் ஆகும்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# செய்திகள்

### மே 4-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை

சென்னை மயிலை அப்பர் ஸ்வாமி கோவிலில், ஸ்ரீ ராம பக்த ஜன ஸபா சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட 31வது ஸ்ரீராம நவமி வைபவத்தில் நம் ஸ்வாமிகள் ''பக்த சரித்ரம்'' உபந்யாசம் செய்தார்கள்.

### மே 11-ந் தேதி - சித்ரா பௌர்ணமி

'அக்ஷய த்ருதியை' முன்னிட்டு சென்னை ப்ரேமிக பவனத்தில் விசேஷ திவ்ய நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### மே 23, 24, 25 தேதிகளில்

சென்னை, மேலமாம்பலம் அயோத்யா மண்டபத்தில், Grand Bhajan Carnival வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### ஜூன் 3-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை

பெங்களூர், மல்லேஸ்வரம், ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தில் ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் ஜயந்தி சபா டிரஸ்ட் அவர்கள் நடத்தும் பாகவத 'ஸப்தாஹ ஸதக்ருது' மஹோத்ஸவத்தில் நம் ஸ்வாமிகள் கலந்து கொள்வார்கள்.

### ஜூலை 6-ந் தேதி

சீர்காழி அருகிலுள்ள திருநாங்கூரில் அரிமேய விண்ணகரம் (குடமாடு கூத்தர்) கோவில் மஹா ஸம்ப்ரோக்ஷணத்தில் நம் ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

**மங்களானி பவந்து**


# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98/
WPP No. TN/MS(S)/54/98

| வேணு:3 | ஜூன் 1998 | கானம்:11 |
| --- | --- | --- |

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar